# திராவிட தேசத்தின் மகிமை மகன்

## நல்லூரர் சுவாமி சா. ஞானப்பிரகாசர், மா. ம. தி.

(சென்றவாரத் தொடர்ச்சி)

### கலாபனையிடையே தளராத பொறுமை:

இத்தகைய இக்கட்டான சுற்றாடலில் வாழ்ந்து கொண்டு பற்பல கலைநூல், சாஸ்திர அறிவுத் துறைகளிலே திறமை பெற்றது போரச்சரியம் தருகிறது. எனினும் அவரது சாந்தியே அவருடைய குணவிசேடமெனக. அவரின் அதிசயமான ஆள்மை, கெம்பீரமான தோற்றம், பரந்த நெற்றி, அமைதியான வதனம், உயர்ந்த உருவம், நரைமயிர், நீண்ட தாடி, உரத்த உறுப்புகள் இவை இந்தச் சாந்தியோடு சேர்ந்து, அவருக்கு ஒரு மாட்சிமை அளித்தன. இதனால், நல்லூரின் "பழைய கிழவன்" என்று அழைக்கப்பட. மெய்யாகவே தகுதியுடையவரானர். அர்ச்சிய அத்தனுசியாரின் சரிதையில் வருவதுபோல இவருக்கு எதிராகவும் அநேக அபாண்டங்கள் ஆவலாதிகள் பரப்பப்பட்டன. ஆனால், தீயோன் ஏவிய கூர்கணை யாவும், தமது தாசருக்கு ஆறுதல் அளித்து அவர்களுக்கு இழைக்கும் இன்னல்களைப் பழிவாங்கும் ஆண்டவன் மேற்கொண்ட அவருடைய விசுவாசகவசத்திலும் நம்பிக்கை என்னும் கேடயத்திலும் பட்டுஒடிந்தன.

இதிலேதான் அவருடைய பயன் நிறைவாழ்வின் ஊற்றை, பலவித வேலைகளின் மூலவேரை, 46 வருட குருத்துவ சேவையின், கடின உழைப்பின் காரணத்தை நாம் காண வேண்டும். "சேனைகளின் தேவனாகிய ஆண்டவருக்காக நான் வேகமான ஆவல் கொண்டேன்" என்று அவர் எலிசாவோடு கூற முடியும். புனித சின்னப்பரைப் போல அவர் தனது ஆயிரக்கணக்கான புதுவிசுவாசிகளை விளித்து "உங்கள் உயிருக்காக என்னை அளித்து, அழிய ஆயத்தமாயிருக்கிறேன்" என்று சொல்லலாம். இந்த ஆவல் தான் 37 புதிய வேதபோதக நிலையங்களைத் தொடங்கவும், கோவில்களும், சிற்றாலயங்களும் அவையருகிலமைக்கவும், யூலனூர் மல்வத்தை போன்ற கிராமங்களைப் புதிய விசுவாசிகளுக்கு அமைத்துக் கொடுக்கவும் அவரைத் தூண்டியது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவ்விசுவாசிகள் உயர் வகுப்பினரின் பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து மீள இவ்வாறு வழிதிறந்து வைத்தார்.



### அதிகாரமான இதிகாச ஆசிரியன்:

அதே ஆவல்தான் யாழ்ப்பாணச் சாதாரண திருச்சபையின் சரிதையை ஆராய அவரை உந்தியது. மாசிப் பனிப் புகார் பரிதிப் பிரபையின்முன் இருந்தவாறு இவர் சரித்திர ஆராய்ச்சியிற் புகுந்ததும் அநேக புனைகதைகளும் மூடக்கொள்கைகளும் ஓடிவிலகின. அவர் காலத்துக்கு ஒரு சந்ததி பிந்திய எமக்கோ மேல்வரும் மாணவர்க்கோ, அன்று புழங்கிய நல்லூர்ப் பராசசேகரன் செகராசசேகரன் பற்றிய விசித்திர விளக்கம் பரிகாசமாயிருக்கும். சரித்திர ஆராய்ச்சி எனும் சாளரத்தைத் திறந்து பழைய யாழ்ப்பாணம் எனும் நல்லூர்மேல் ஒளிவிழ விட்டவர் சுவாமி ஞானப்பிரகாசியாரே ஆவர்.

யாழ்பாடி எனும் குருட்டுப் புலவனோடு தொடர்பு செய்தயாழ்ப்பாணம் என்னும் கட்டுக்கதையைத் தகர்த்தெறிந்தார். அது பற்றிப் பாளி மகாவமிசம், சிங்களச் சரிதைகள், தமிழ்ச் செய்யுள்கள் போன்ற சரித்திர சாசனங்களேதிலும் பேச்சில்லை. யாப்பனபட்டாவோ, யாழ்ப்பாணம் என்ற பெயர்கள் போர்த்துக்கிசர் காலத்திலேயே பாவனைக்கு வந்தன. இந்தச் சொல் நல்லூர் என்ற தமிழின் சிங்கள மொழி பெயர்ப்பே என்று சுவாமி ஞானப்பிரகாசர் சரியான ஆதாரங்களோடு சுட்டிக்காட்டினர். இன்னும், நல்லூரிலே சங்கிலியன் மாளிகை, முன்னர், ஒரு வேளை, மாளிகை இருந்த இடத்தில் ஒல்லாந்தர் நிறுவிய கட்டிடம் என்று அத்தாட்சிப்படுத்தினர். அதோடு, மூன்று கல் தூரம் வடக்கேயுள்ள கோப்பாயில் சங்கிலியன் மாளிகை வளவையும் கண்டுபிடித்தார். நாணய சாஸ்திரத்துக்கும் அவரது ஆராய்வு ஆக்கமளித்தது. தமது சொந்த இடப உருவமும் சேது என்னும் சிறப்புப் பெயரும் பொறித்த விசேடநாணயங்களை நல்லூர் மன்னர் பாவித்தனரென்று காண்பித்தார். மயில்வாகனப் புலவர் இயற்றிய "யாழ்ப்பாண வைபவமாலை" யைப் படித்து அதன் பிழைகளைத் திருத்தி, குறைகளை நிறைத்து "யாழ்ப்பாண வைபவ விமர்சனம்" வெளியிட்டார். அவரது கூரியபுத்தி, ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனாக "யாழ்ப்பாண மன்னர்" எனும் பாரியவரலாற்று நூல் 1920-ல் முதன் முறை வெளிவந்தது. அவருடைய அருமையான எழுத்துப் பிரதிகளிடையே, பிரசுரிக்கத் தயாராக, தட்டச்செழுத்தில் ஏடுகள் இரண்டு உண்டு. ஒன்று, முழுவதும் புதிதும் பெரிதும் ஆக்கிய "யாழ்ப்பாண, மன்னர்" சரிதை, மற்றது, ஒரு இதிகாச ஆராய்ச்சிக் கட்டுரை; "புராதன தமிழர் — அவர்களின் ஆதித் தாயகமும் சீர்திருத்தமும்" என்றது. திராவிட பண்பாட்டிலும், தமிழ்க்கலாச்சாரத்திலும் கரிசனையுள்ள பெரியார் போதிய பணஉதவிசெய்ய முன்வந்தால் அவற்றை விரைவில்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

---

**நல்லூர்**
**சுவாமி ஞானப்பிரகாசர்**
**மறைந்த**
**25ஆம் வருட**
**ஞாபக வழிபாடு**

சுவாமியாரின் மறைவு அவர் இறுதியாக தமது ஜனனபதி மானிப்பாயில் அடியிட்ட புனித அந்தோனியார் ஆலயத்தில் சனிக்கிழமை (22-1-72) பி. ப. 5-00 மணிக்குத் திருப்பலியுடன் நினைவு கூரப்படும். குருக்கள், கன்னியர்கள், விசுவாசிகள், அன்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

பங்குக்குரு
மானிப்பாய்

---

**நினைவு கூருவோம்**

காலஞ் சென்ற வண: சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுக்கு இம்மாதம் 22-1-72இல் பி; ப. 5 மணிக்கு திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்தும இளைப்பாற்றிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். கிறிஸ்துவமக்கள், குருப்பிரசாதிகள், கன்னியாஸ்திரிமார்கள், பாடசாலைப் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திருநெல்வேலி,
கத்தோலிக்க மக்கள்.

---

# ஒற்றுமை இயக்கத்தில் உயர்ந்தபடிகளை எய்துவிட்டோம்

கிறிஸ்தவ சபைகள் ஒன்றுபடவேண்டும் என்னும்உணர்ச்சி உலகிற்தோன்றி இற்றைக்குப் பலவருடங்கள் ஆகியும், பலகாலமாக ஆராய்வுக் கட்டமாகிய முதலாம் படியிலேயே இவ்வியக்கம் காலத்தைக் கழித்திருக்கின்றது. ஆயினும் முன்னேற்றம் கண்டிருக்கின்றோம் என்பதை மறுப்பவர் உண்மையைக் கண்டுகொள்ள இயலாதவர்களே. இன்று நடந்துவரும் முறைகளைப் 10வருடங்களுக்குமுன் எவரும் கண்டிருக்க முடியாது. முன்னேற்றத்தின் உயர்படிகளை நாம் அடைந்துவிட்டோம். தத்தம் முறைகளே சரியானவைஎன அன்று வாதாடியவர்கள், இன்று பிறரது முறைகளிலும் உள்ள உண்மைகளை ஒப்புக்கொள்ள ஆசையுடையவர்களாயிருக்கின்றனர். விசுவாச விஷயங்களில் ஒன்றுபட வேண்டும் என்னும் ஆவல் யாவர்மனதிலும் குடிகொண்டு விட்டது. எங்கெங்கு சாதகமாக இருக்கின்றதோ அங்கங்கெல்லாம் தேவனை ஒன்றித்து வணங்கத் தயாராக இருக்கின்றனர். இந்த மனப்பான்மையில் சமய விசுவாசங்களிலும் ஒன்றிப்புத்தோன்றிவிட்டது. கிறிஸ்தவசமய விசுவாசத்தின் நடுமையமாகிய சற்பிரசாதத்தைப் பற்றிய விசுவாச சததியத்தில் பெருமளவு ஒற்றுமை சென்றவருட இறுதியில் உறுதிப்பட்டிருப்பதால் ஒற்றுமை இயக்கம் உயர்படிகளை அடைந்துவிட்டதுஎன்பதில ஐயத்துக் கிடமில்லை. எனினும், இத்தனைதூரம் உதவிய தேவன், முழு ஒற்றுமையும் காண உதவவேண்டுமெனக் கிறீஸ்தவர் யாவரும் செபிக்கக் கடமைப்பட்டவராவர்.

கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)
மலர்: 97 இதழ்: 3
தை 22 — 1972
பிரதி சதம் 15
சத்தியவேத
பாதுகாவலன்
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## சத்தியவேத பாதுகாவலன்

# சுவாமி ஞானப்பிரகாசர்

கத்தோலிக்க திருச்சபை உலகுக்களித்த தமிழறிஞர்களுள் தலைசிறந்தவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்றால் அது மிகையாகாது. கால் நூற்றாண்டின்முன் எம் மத்தியிலிருந்து மறைந்த இம்மகாமேதை தமது பல்திறப்பட்ட அரிய ஞானத்தின் காரணமாக உலகப் புகழ்பெற்றவர், அவரது அருஞ் செயல்களையும், அரும்புகழையும் கொண்டு, அவரைப் பெற்ற கத்தோலிக்க திருமறையும், தமிழுலகும் இன்று பெருமையடைகின்றன.

விந்தையான அவரது சாதனைகள் ஒரு துறையைச் சார்ந்தனவல்ல. உலக அறிவியற் துறையில் அவர் ஒரு பன்மொழிப் பண்டிதர், சொற்கலைப் புலவர், வரலாற்று வல்லுநர், தத்துவ மேதை. கத்தோலிக்க உலகில் அவர் ஓர் ஒப்பற்ற குரு, ஆர்வம் மிக்க வேதபோதகர், இணையற்ற பிரசங்கி, தாழ்த்தப்பட்டோரின் மீட்பர். அவரது வேத போதக ஆர்வத்துக்கு இணையாகக் கூறக்கூடியது, அவரது தமிழார்வம்தான். இந்த இரு சக்திகளும் அவரை ஈர்க்க அவர் நிலைநாட்டிய சாதனைகளைக் கண்டு எமக்கு அளவற்ற வியப்பு உண்டாகின்றது. அதுவும் அவர் வாழ்ந்த சூழ்நிலையில், அவருக்குக் கிடைத்த கருவிகளோடு அத்தனை இடைஞ்சல் இக்கட்டுகள் மத்தியில் இவ்வளவும் சாதித்தாரென்றால் அவர் ஓர் அற்புத மனிதர் என்பதில் ஐயமென்ன?

செல்வவளம்மிக்க சைவ மரபிலே பிறந்தவரைக் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதிக்கவும், ஏழைகளினதும், ஒடுக்கப்பட்டவர்களினதும் துயர் துடைக்கவும் இறைவன் அழைத்தார். உலகிலே தனக்குக் கிடைத்திருக்கக் கூடிய பதவியையும், புகழையும், செல்வத்தையும் தள்ளிவிட்டு இறைவனுடைய அழைப்புக்குச் செவிசாய்த்து அவருக்கு ஊழியம் புரிய முன்வந்தார். நாற்பத்துநான்கு ஆண்டுகளாக நல்லூர்ப் பதியில் வாழ்ந்து ஏழை எளியவர்களின் இம்மை மறுமை நலன்களுக்காகப் பாடுபட்டதும், ஐயாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததும், மூப்பத்தேழு கத்தோலிக்க தேவாலயங்களை நிறுவியதும் அவரது குருத்துவப் பணிகளின் சிகரங்களாகும்.

சமயத் தொண்டில் இவ்வளவு அயராது உழைத்து வந்த சுவாமியார் தமது அறிவை விருத்தி செய்வதற்கும், நூல்களை எழுதுவதற்கும், ஆராய்ச்சிகளைச் செய்வதற்கும் அவகாசமும், சக்தியும் எங்ஙனம் பெற்றார்? தமக்கு அளிக்கப்பட்ட அர்ப்பணத்தை ஒன்று பத்தாகத் திருப்பிக் கொடுக்கும் இறைவனுடைய செயலா அது? ஓயாமல் உழைக்கும் சக்தியையும், அறிவுத்துறையில் போராற்றலையும் இறை பணியின் மூலமே அவர் பெற்றுக் கொண்டாரா?

அதெப்படியிருப்பினும் சுவாமி ஞானப்பிரகாசர் நிகரற்ற ஒரு மேதை என்பதை உலகம் ஒப்புக்கொள்ளுகின்றது. அவரது காலத்தில் சிலர் அவரைத் தூற்றியிருக்கலாம். ஆனால் இன்று அவரது சாதனைகளைக் கொண்டு பெருமைப்படாத ஈழத்துத் தமிழர் இல்லையெனலாம். அடிகளாரது பல்வேறு நூல்களால் பயனடைந்த தமிழுலகம் அவரது வாழ்க்கை இலட்சியமான "சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி'யை அவர் இயற்றி முடிக்கக் கொடுத்து வைக்கவில்லை. இது தமிழுக்கு ஏற்பட்ட நட்டமேயன்றி, ஞானப்பிரகாசர் புகழுக்கு ஏற்பட்ட நட்டமல்ல.


சுவாமி ஞானப்பிரகாசரின் 25ஆம் வருட ஞாபக தினத்தைக் கொண்டாடும் நாம் அவர் ஆற்றிய பணிகளைக் கண்டு வியப்பதோடும், அவரது நூல்களைப் படிப்பதோடும் மட்டும் நின்றுவிடாது அவரது முன்மாதிரியையும் பின்பற்றினால் அது பெரும் நன்மை பயக்கும்.

"அன்புண்டு இரக்கமில்லையென்று பாசாங்கு செய்யமுடியுமா? அன்பும், இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்."

— ட்ரைடன்

* * *

"அறத்தின் இலட்சணம் தெரியாதவரே 'அறம்செய்தோம் கூலி எங்கே'? என்று இரைந்துகொண்டிருப்பார்." —மேட்டர்லிங்



# இறைவாக்கு வழிபாடு

ஆண்டின் 3ஆம் ஞாயிறு

## உண்மையான நற்செய்தி

**முன்னுரை :**

இயேசு கொணர்ந்த நற்செய்தியைக் கேள்வியுற்ற அனைவரும் அதை மற்றவர்களுக்கும் அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

**1-ம் வாசகம் :**

இசை. 8 : 23—9 : 3. கொடுமைப்படுத்தப்பட்ட மக்களுக்குக் கடவுள் ஒளியும் இன்பமும் அனுப்புவார் என இசையாஸ் எடுத்துரைக்கிறார்.

**2-ம் வாசகம் :**

1 கொரி. 1 : 10—13, 17. யாவற்றுக்கும் மேலாக நற்செய்தியைப் பரப்புவதற்கே தாம் அனுப்பப்பட்டதாகப் புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதுகிறார்.

**சுவிசேஷம்:**

மத். 4 : 12—23. கிறிஸ்து தமது அப்போஸ்தலரைப் போதிப்பதற்கு அனுப்புகின்றார். இதனால் இசையாசின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது.

**திருவுரைக் குறிப்புகள் :**

இன்றைய பூசை வாசகங்கள் கடவுளின் மீட்புத்திட்டத்தில் மூன்று படிகளை எடுத்துக் காட்டுகின்றன. முதல் வாசகத்தில் இசையாஸ் மீட்பரின் வருகையை முன்னறிவிக்கின்றார். சுவிசேஷம் இயேசு தமது ஈடேற்ற அலுவலின் முக்கிய கட்டமாகிய பகிரங்கப் பணியைத் தொடங்குவது பற்றி எடுத்துக் கூறுகின்றது. நிருபத்தில் புனித சின்னப்பர் தாம் பெற்றுக்கொண்ட அழைப்புக்குப் பிரமாணிக்கமாகக் கிறிஸ்துவின் படிப்பினையைப் பரப்பி வருவதாகக் கூறுகிறார். ஒவ்வொரு வாசகத்திலும் பின்னணியில் துன்பமும், துயரமும் பிணக்கும், பிரிவினையும் காணப்படுகின்றன. இவை இயேசுவின் காலத்தில் இருந்தது போலவே இன்று நமது காலத்திலும் காணப்படுகின்றன. கலகங்கள், போர்முழக்கங்கள் நடுவிலே இசையாஸ் மக்களுக்கு மகிழ்ச்சியை வாக்களிக்கிறார். புனித ஸ்நாபக அருளப்பர் சிறையில் அடைக்கப்பட்ட நாட்களிலே இயேசு கலிலேயாவுக்குப் புறப்படுகிறார். கொரிந்திய மக்களிடையே காணப்பட்ட பிணக்குகளையும், பிரிவினைகளையும் கண்டு பெரிதும் கவலையுற்ற புனித சின்னப்பர் அவர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார். நமது உலகிலும் சண்டைகள் சச்சரவுகள், அநீதிகள் அநியாயங்கள் உண்டு. எனவே, இயேசுவின் நற்செய்தி என்றும்போல் இன்றும் எவ்வளவோ பொருத்தமானது. ஆகவே, உண்மையான நற்செய்தியை உலகில் பரப்புவது நமது கடமையாகும்.

## வலங் குன்றியவர்களைக் கைவிடுதல் யோக்கியமாகுமா?

"எமது சமூகத்திலே வலங் குன்றியவர்கள் அநேகர் இருப்பினும் அவர்களில் அக்கறை கொள்வோர், அவர்களுக்குச் சந்தோஷம் கொடுக்கத்தகும் சேவையில் சிலநேரம் செலவு செய்ய முன்வருவோர் தொகை போதியளவுஇல்லாதிருப்பது பெரும் மனவேதனைக்குரிய கருமமாகும். தேவனால் பல நன்மைகளும் அளிக்கப்பட்ட பெரியோருக்கு இது யோக்கியமாகாது" என இங்கிலாந்து தேசத்தில் வலங் குன்றியவர்கள் சேவையில் தனது நேரத்தையும், பொருளையும் செலவு செய்துவரும் திரு. ஜீன் வனியர் அவர்கள் தமது சேவைகளுக்கு ஊக்கமளிக்க வெஸ்மினிஸ்ரர் மாமன்றத்தில் அண்மையில் கூடிய கூட்டமொன்றில் கூறியருளினர். வனியர் அவர்கள் அன்று இங்கிலாந்தில் கூறிய வார்த்தைகள் எமது நாட்டில் உள்ள பெரியோர் சிறியோர் செவிகளிலும் ஏறி அவர்கள் மனதைத் தட்டி, சமூகக் கடமையில் விழிப்புறச் செய்யமாட்டாதோ?

## பூசை வழிகாட்டி
### தை மாதம் — 1972

23. ஞாயிறு ஆண்டின் 3-ம் ஞாயிறு [ப]
**வாசகங்கள் :** இசை. 8 : 23—9 : 3.
1 கொ. 1 : 10—13, 17.
மத். 4 : 12—23.

24. திங்கள் : புனித பிரான்சிஸ் சலேசியார் [வெ]
**வாசகங்கள் :** 2 அரச. 5 : 1—7, 10.
மாற். 3 : 22—30.

25. செவ்வாய் : புனித சின்னப்ப. ம. திரும். [வெ]
**வாசகங்கள் :** அப். பணி. 22 : 3—16.
மாற். 16 : 15—18.

26. புதன் : புனித தீமோத்தேயு, தீத்துஸ் [வெ]
**வாசகங்கள் :** 2 அரச. 7 : 4—17.
மாற். 4 : 1—20.

27. வியாழன் : நாட்பூசை [ப]
(அ) புனித அஞ்செலா மெரிசி [வெ]
**வாசகங்கள் :** 2 அரச. 7 : 18—19, 24 — 29.
மாற். 4 : 21—25.

28. வெள்ளி : புனித தோமஸ் அக்குவினஸ் [வெ]
**வாசகங்கள் :** 2 அரச. 11 : 1 — 10, 13—17.
மாற். 4 : 26 — 34.

29. சனி: நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 2 அரச. 12 : 1—7, 10—17.
மாற். 4 : 35—41.

## வத்திக்கானும் போலாந்தும் நெருக்கிய உறவை நாடுகின்றன

வத்திக்கான் வெளிவிவகாரக காரியாலயத்தில் உயர்பதவி வகித்திருக்கும் கருதினால் கசரோலி அடிகளார் அண்மையில் போலாந்து தேசத்துக்குச் சென்று பத்துத் தினங்கள்வரை அங்கேதங்கி, போலாந்து பொதுவுடைமைக் கட்சி ஆட்சியாளருடன் அங்குள்ள திருச்சபையின் விவகாரங்களை ஆராய்ந்ததன் பயனாக, வத்திக்கான் வட்டாரங்களில் போலாந்து தேசத்துடன் வத்திக்கான் நெருங்கிய உறவு வைத்துக் கொள்ளும் காலம் சமீபித்திருக்கின்றதெனக் கூறப்படுகிறது. இரு வருடங்களுக்குமுன் போலாந்தின் பிரதமர் கொமியுல்கோ அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டதன்பின் அத்தேச அரசாங்கம் போலாந்து கத்தோலிக்கருக்கு இருந்து வந்த தடைகளைப் படிப்படியாக அகற்றி வந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கர் மத்தியில் ஞானப்பிரகாசர்

வித்துவான்
ச. அடைக்கலமுத்து

நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர், கத்தோலிக்கர் மத்தியில் வாழ்ந்த காலத்தில், யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் ஒவ்வொருவரும் செல்வர் வீட்டுச் சின்னப்பிள்ளை போலத் தங்களை நினைத்து கொண்டார்கள்.

பல்வேறு வேடங்களில் தங்களுக்கு வரக்கூடிய பேராபத்துக்களில் தலை கொடுக்க ஞானப்பிரகாச சுவாமியிருக்கிறார் என்ற துணிவு, ஒவ்வொருவர் உள்ளத்திலும் கம்பீரமாக உட்கார்ந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் இலக்கண இலக்கிய அறிவிலும் ஆராய்ச்சியிலும் தோய்ந்த பல செந்தமிழ் வித்துவான்கள், சைவப் பெரியார்களாகவும் விளங்கினர். அவர்கள் சுவாமியவர்களிடத்தில் கொண்டிருந்த நட்பும் மதிப்பும் நாம் என்றும் நினைவுகூரத்தக்கவை. ஞானப்பிரகாசர் ஒரு பேரவையில் வீற்றிருந்தால் அதனை ஒரு பெருமையாகவே அவர்கள் கருதினர். மகாவித்துவான் கணேச ஐயருக்குப் பொற்கிழி அளித்த பெருவிழாவில் சுவாமியவர்கள் மேடையில் வீற்றிருக்கப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறிய பாராட்டுரைகள், இன்னும் என் நெஞ்சை விட்டு நீங்கவில்லை.

சுவாமியவர்களுக்குத் தமிழிலுள்ள ஆழ்ந்த அறிவும், பல மொழிகளில் அவருக்குள்ள தேர்ச்சியும், உண்மையை எடுத்துரைக்க அஞ்சாத நெஞ்சும், அவரை மலை உச்சியில் உள்ளவரைப் போலக் காட்டிக் கொண்டிருக்கும்.

கத்தோலிக்க மகா நாடுகள், பேரவைகள், நினைவு தினங்கள் என்பவற்றில் அவரே தலைமை தாங்குவார். வீரமாமுனிவர் விழா என்றாலென்ன, சாங்கோபாங்க சுவாமிகள் நினைவு நாள் என்றாலென்ன அவருக்கே முதலிடம் காத்திருக்கும். 1939ஆம் ஆண்டு யாழ்ப்பாணமே அதிசயப்படக் கூடியவாறு கடலணை மைதானத்தில் நிறைவுற்ற சற்பிரசாத சமாகமத்தின் கடைசிக் கூட்டத்தில் அவர் ஆற்றிய பேருரை, சந்ததி சந்ததியாக நினைவு கூரத்தக்கதாகும். பாதுகாவலன் ஆசிரியராய் 25ஆண்டுகள் பணிபுரிந்த திரு. அ. ஞானப்பிரகாசம் என்னும் எழுத் தோவியலைக் கௌரவிக்கும் விழாவில் தலைமை தாங்கி, வட இலங்கைப் பத்திரிகைகளின் வரலாற்றையே விளக்கி வைத்தார்.

மருதமடு திருப்பதியின் வருடாந்த உற்சவங்களுக்கு ஞானப்பிரகாசர் ஒரு வார்த்தை சொல்லா விட்டால் உப்பில்லாத உணவுப் பண்டம் போல யாத்திரிகர்களுக்குப் பத்தியப்படாது. யாழ்ப்பாணம், இளவாலை, சில்லாலை, அச்சுவேலி முதலிய பெரிய பங்குகளுக்கு வருடத்தில் ஒரு முறையாவது ஞானப்பிரகாசரை அழையாவிட்டால் அங்குள்ளவர்களுக்கு ஆறிய கஞ்சிபோல் எல்லாம் "சப்" என்றிருக்கும்; உற்சாகம் இழந்துவிடுவார்கள்.

அவருடைய தர்க்கப் பிரசங்கங்களைக் கேட்கச் சமயபேதமில்லாமல் வண்டிகளிலும், வாகனங்களிலும் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டுவிடுவார்கள். அந்த நிகழ்ச்சிகளைப் பலர் சொல்லி வாயூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். கத்தோலிக்கர் எழுதுகிற நூல்களுக்கு ஞானப்பிரகாசருடைய முன்னுரையும் மேற்பார்வையும் இல்லாவிட்டால் பொதுமக்களிடையே செல்வாக்குக் கிடையாது. நூல் எழுதும் ஆற்றலற்றவர்களும் ஞானப்பிரகாசர் இருக்கிறார் என்ற துணிவில் நூல்களை எழுதவும் அச்சிடவும் ஆரம்பித்தார்கள்.

கத்தோலிக்க பண்ணையில் திருவூழியம் செய்ய நவசந்நியாசத்தை முடித்து வெளிப்படும் குருமார்கள், தங்கள் ஆரம்ப பயிற்சியை ஞானப்பிரகாசரிடமே பெற்றுக்கொள்வார்கள். அவருடைய விசாலமான ஞான அறிவு, சாதாரண வாழ்க்கை, ஏழைகளின் அணைப்பு, தமிழ்ப் புலமை, பிரசங்கசுகிர்தம் இவற்றையெல்லாம் பலர் 'கொப்பி' யடிக்கப் பின்னிற்கவில்லை.

கத்தோலிக்கர்களுடைய தேவைகளை நிறைவேற்ற அவர் எப்பொழுதும் முன்நின்றார். செபநூல்கள் குறைவாயிருந்தால் அவற்றைப் பதிப்பிப்பார்; ஞானவாசினை நூல்கள் அருகியிருந்தால், அவ்விடைவெளியை நிரப்புவார்; பிரசுரங்களை அச்சிட்டுப் பரப்புவார்; பூசைச் செபங்களை மொழி பெயர்த்து, அவர் எழுதிய "எனது பூசைப்புத்தகம்" அவருடைய இறுதிக் கைவரிசையாகும். நூற்பரப்பில் அவர் செய்த தொண்டை நாம் ஆச்சரியத்துடன் நோக்கவேண்டியிருக்கிறது. பலவடிவிலும் பலபொருளிலும் காலத்துக்கமைய அவர் எழுதித் தள்ளியவை, அம்மம்ம! அளப்பரிது.

கத்தோலிக்க சீவியத்திலும் நன்முன் மாதிரியிலும் யாராவது முன்நின்றால் அவர்கள் வாழ்க்கையைக்கூட அவர் கவனியாமல் விட்டுவிடவில்லை. எல்லைவிரிந்த விசாரணைப்பங்கில் எங்கே தேவை நேரிட்டாலும் அங்கே அவரைக் காணலாம். அப்போஸ்தலரான சின்னப்பரையும், கோவைக்குருமாரையும் நினைவூட்டும் ஒரு உத்தம துறவியாக வாழ்ந்து வந்தார். தனது மக்களுக்குத் தன்னிடமுள்ள ஒரே ஒரு உடுத்துணியையும் கொடுத்துவிட்டுப் பச்சைத் தண்ணீரோடு சயனம்பண்ணவும் அவர் பின் வாங்கவில்லை.

பிறநாடுகளுக்குச் சென்று உயர்கல்விபெற்ற குருமார்கூட அந்நாடுகளிலிருந்து தங்கள் சந்தேகங்களை ஞானப்பிரகாசரிடமே எழுதித் தீர்த்துக் கொள்வார்கள். தமிழர் பண்பாடு தொடர்பாக ஏதாவது பெருமையடித்துக் கொள்ளவும் அவரையே தேடவேண்டியதாயிற்று.

கத்தோலிக்கருக்கு மாறாக எந்த ஒருமனிதன், எந்த ஒரு பேனை, எந்த ஒரு கடதாசித் துண்டு பேசுகிறதோ அதற்கு உடனே பதில் எழுத எந்நேரமும் விழிப்பாயிருப்பார். பாடசாலைகளை ஆரம்பித்துப் பணிபுரிந்தார்; கோயில்களைக் கட்டினார்; குருமனைகளை அமைத்தார்.

ஞானோபதேசக் கல்வியில் அவர் காட்டிய ஊக்கமும், வாஞ்சையும் சொல்லுந்தரமன்று. அவருடைய ஞான உபதேச வகுப்புகள் மரநிழலில் நடைபெறும். அந்த வகுப்புக்கு, பாலர் முதல் வயோதிபர்வரையில் பலதினிசான மக்கள் வருவார்கள்; பிள்ளை குட்டிகளோடும் வருவார்கள். சுவாமியார் தாடியைத் தடவிக்கொண்டு சிரித்தபடியே வகுப்பை நடாத்துவார். படங்களும், புத்தகங்களும் அவருக்கு முன்னால் விரிந்து கிடக்கும்.

அவருடைய குரல், தங்க மணிக்குரல். பிரசங்கத்துக்கென்றே அமைந்த இழையங்களால் அவர் தெளிவாகப் பேசும்போது அந்தச்சுவை கர்ணாமிர்தமாயிருக்கும். பிரசங்கம் முடியும்வேளை இரசிகர்களுக்கு ஒரு பெருமூச்சு வரும். சுருக்கமாய்க் கூறினால், ஒரு பாதுகாவலராக, எழுத்தாளராக, நூலாசிரியராக, பேச்சாளராக, துறவியாக, கலைஞராக கத்தோலிக்கர்களுக்கு ஒரு அமுத சஞ்சீவியாக அவர் வாழ்ந்துவந்தார்.

## கருதினல் மின்சென்ரி மீண்டும் ஓர் இக்கட்டில்

ஹங்கேரிதேசக் கருதினல் மின்சென்ரி அடிகளார் அவுஸ்திரியதேச வாசியாகவே தான் எஞ்சிய வாழ்நாளைப் போக்க இருமாதங்களின்முன் அங்கு சென்றிருந்தார். ஆனால் அங்கு சென்றதும் அவருக்கு ஓர் இக்கட்டான நிலைமை உருவாகியது. அதற்குக் காரணம் அவர் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் உள்ள ஒரு வாக்கியத்தைத் தப்பாக அவரது எதிரிகளிற்சிலர் கருத்துக்கொண்டதேயாகும். அவரது வாக்கியத்தில் தற்போது ஹங்கேரிக்கும் அவுஸ்திரியாவுக்கும் உள்ள எல்லைப்பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதாகவும், அவர் அதனால் தேசங்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்படுவதற்குக் காரணமாய் இருக்கிறாரென்றும் சிலரால் சுட்டிக் காட்டப்பட்டது. இத் தப்பபிப்பிராயம் அவர் வரைந்த வாக்கியத்தை ஜேர்மன் பாஷையில் பிழையான மொழியாக்கம் செய்ததினால் விழைந்தது என இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதனால் ஏற்பட்ட கொந்தளிப்பு அடங்கி விட்டது.

## வட அயர்லாந்தில் விசாரணையில்லா மறியல்முறை தவிர்க்கமுடியாதாம்

வடஅயர்லாந்தில் நடந்துவரும் கலகங்களை அடக்க ஆங்கில அரசாங்கம் கையாண்டுவரும் முறைகளில் கலகக்காரர்என்று எண்ணப்படுபவர்களை விசாரணையின்றி மறியலில் இடுதலுமொன்றாம். இது நீதியன்றுஎன எதிர்த்துப் பிரமாண்டமான ஒரு விண்ணப்பம் ஆங்கிலநாட்டுப் பிரதமருக்கு உலகநீதிக் கத்தோலிக்க ஆங்கிலநாட்டு ஆணைக்குழு சமர்ப்பித்திருந்தது. சென்றவாரம் பிரதமர் ஹீத் அவர்களுக்குப் பதிலாக இதுவிஷயமாக உள்நாட்டுமந்திரி மோடிங் விடையளித்துள்ளார். அதில், "இம்முறை விரும்பத்தகாத முறை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால்படுகொலை, பயங்கரமுறைகள் இதிலும் விரும்பத்தகாதன என்பதே என் அபிப்பிராயம்" எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

## டபிளின் நகர அதிமேற்றிராணியார் ஓய்வுபெறுகின்றார்

அயர்லாந்துதேச மாபெரும் நகரமாகிய டபிளின் அதிமேற்றிராணியாராகச் சென்ற 30 வருடகாலமாகத் தொண்டு செய்துவந்த மக்குவைட் அடிகளார் 76-ம் வயதில் தம் பதவியிலிருந்து ஓய்வுபெற விண்ணப்பித்து அண்மையில் அதைப் பெற்றுக் கொண்டார். சென்றவருடமே அவர் விண்ணப்பித்திருந்தும் பரி. தந்தை உடனடியாக அதை அனுமதிக்கவில்லை. இப்போது அவரது தேகசுகம் குன்றியிருப்பதினால் அவருக்கு ஓய்வு அவசியமாகின்றது. அவரிடத்தில் 47 வயது நிரம்பியவரும், கிழைத்தேய பாஷைகளிலும் பழைய வேதாகமங்களிலும் பாண்டித்தியம்பெற்று சென்ற சில வருடகாலமாக டபிளின்நகர சர்வகலாசாலையில் அவற்றின் பேராசிரியராக அமர்ந்திருந்த வருமான றயன் அடிகளார் நியமனம் பெற்றிருக்கின்றார்.

## தீமைவருமுன்

ஆங்கில நாட்டிலே சினிமாப் படக்காட்சி, தொலைக்காட்சி மூலமாகச் சிறுவருக்கு வரக்கூடிய தீமைகளைக் குறைப்பதற்காக ஒரு புது யோசனை கூறப்பட்டிருக்கிறது. தீமைதரக்கூடிய காட்சிகள் நிகழ்வதற்கு முன்பாகவே எந்தெந்தக் காட்சிகளில் எவ்வித தீமைகள் பிள்ளைகளுக்கு ஏற்படக் கூடுமென்று முன்னோடியாகவே விளம்பரம்செய்தல் நன்மைதருமென ஆங்கிலநாட்டு கார்டிப் பிரதேச கத். ஆசிரியர் சங்கத் தலைவர் அண்மையில் யோசனை தெரிவித்திருக்கின்றார்.

## குடும்பத்தைப் பாதுகாக்க மேலும் ஒரு மனு

ஆங்கிலநாட்டில் குடும்பப் பாதுகாப்புக் காரணமாக அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டிருக்கும் சங்கத்தலைவரும், முக்கிய உத்தியோகத்தரும் பிரதமர் ஹீத் அவர்களுக்குச் செய்திருக்கும் மனுவின் முக்கிய சாரத்துக்கள் :

● இச்சங்கம், ஒரு குடும்பத்தில் இத்தனை தொகைக்கு மேல் பிள்ளைகள் இருக்கக் கூடாதென அரசாங்கம் மட்டுப்படுத்துவதை வன்மையாக எதிர்க்கின்றது.

● நாலு பிள்ளைகளுக்கு மேல் உள்ள குடும்பத் தலைவர்களை, "சமூக துரோகி"களென மதிக்கும் இயக்கத்துக்கு அரசாங்கம் ஆதரவளிப்பதைக் கண்டிக்கின்றது.

● கத். போதனைகளுக்கு எதிராக மேலும் வேறுமுறைகளை அரசாங்கம் வருங்காலத்தில் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றது.

## சற்பிரசாத விசுவாசம்பற்றிய ஒற்றுமை இன்னும் பூரணமாகவில்லை

ஐந்து வருடங்களுக்குமுன் பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரும், அங்கிளிக்கன் சபைத்தலைவர் கன்ரர்பரி அதிமேற்றிராணியார் ரும்சே அடிகளாரும் வத்திக்கானில் சந்தித்ததன் பயனாகக் கிறீஸ்தவ சபைகளின் ஒற்றுமையை முன்னேற்றம்செய்ய எடுக்கப்பட்ட வழிவகைகளுள் அவர்கள் இருசபையினரினதும் விசுவாச ஒற்றுமைகளை ஆராய்ந்து வெளிப்படுத்த நியமித்த ஆய்வுக்குழுவும் ஒன்றாகும். இருவருட காலமாக இருபகுதியினரும் அடங்கிய 18அங்கத்தவர்கள் நடத்திய ஆய்வுகளில் ஒரு விஷயம்பற்றி அக்குழுவினர் தமது முடிவுகளைச் சென்ற வருடத்தில் வெளிப்படுத்தினர். அது சற்பிரசாதத்தைப்பற்றியமுடிவே. முக்கிய அம்சங்களில் ஒற்றுமை கண்டோம்என அவர்கள் உலகம் மகிழ்வுற அறிவித்தனர். அதன்பின் இருபகுதியினரினதும் அதிகார பீடங்கள் அவர்களின் ஆய்வுகளை அறிந்து அனுமதிக்கச் சிலகாலம் சென்றது. இந்த அனுமதி இவ்வருடம் 1-ந்தேதி வெளிப்படுத்தப்பட்டது. இது விஷயம்பற்றிய ஒற்றுமை இன்னும் சம்பூரணமாகவில்லை. ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை முக்கிய அம்சங்களிலே ஆகுமென இருபகுதியினரும் தெரிவித்திருக்கின்றனர். சம்பூரண முடிவு எய்துவதற்கு மேலும் தேவனது அருள்வேண்டும். அந்நாள் விரைவில்வர யாவரும் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## ஞாபக முத்திரை

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் ஞாபகார்த்தமாக தபால்முத்திரை வெளியிடுவது சம்பந்தமாய் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று திரு. எஸ். மார்க்கண்டு அவர்கள் தலைமையில்கூடிய மானிப்பாய்க் கிராமச்சபையின் மாதாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சுவாமிகள் மானிப்பாய்ப் பதியையே தமது ஜனனபதியாகக் கொண்டவர் என்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

## அடையாள அட்டைகள்

ஆள்பதிவுச் சட்டத்தின்கீழ் வழங்கப்படவிருக்கும் அடையாளக்காட்டு ஒவ்வொன்றிற்கும் 2ரூபா 50சதம் செலவேற்படும். இதில் முத்திரைச்செலவு 1ரூபா 50சதம். படப்பிடிப்பாளர் செலவு ரூபா ஒன்று. சட்டபூர்வமாகப் பதிவுசெய்யப்படக் கூடியவர்களாய், 18 வயதுக்கு மேற்பட்டவர்களாய் சுமார் 65லட்சம்பேர் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இவர்கள் தங்கள் அடையாளக் காட்டுகளை எடுக்குமாறு விரைவிலே கேட்கப்படவிருக்கிறார்கள்.

## முப்படைகளுக்கும் உத்தரவு

தற்போது நாட்டின் நாலா பகுதிகளிலும் நடைபெற்று வரும் வழிபறிகள், கொள்ளைகள், களவுகளை நடத்தும் குற்றவாளிகளைக் கைதுசெய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரிலே இராணுவம், கடற்படை, ஆகாயப்படை, பொலிஸ் ஆகிய நான்கும் ஒருங்கே இணைந்து செயல்பட்டுவருகின்றன. இந்தக் கொள்ளைக்கூட்டத்தினர்கள் காடுகளிலே மறைந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதைத்தொடர்ந்தே இவை நான்கும் ஆங்காங்கு தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

## மக்கள் பாடசாலைகள்

அரசாங்க பாடசாலைகள் என்ற பெயருக்குப்பதில் மக்கள் பாடசாலைகளென்று அவைகள் பெயர்மாற்றம் செய்யப்படவிருக்கின்றன. கல்வி மந்திரியின் ஆலோசனைப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்பெயர் மாற்றத்தை இந்தவருடமுதல்நடைமுறைக்குக் கொண்டுவரக் கல்வி அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

## புதிய காரியாதிகாரி பிரிவு

22கிராமசேவையாளர் பகுதிகளைக் கொண்ட வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி பிரிவை இரண்டாவதாகப் பிரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவற்றில் ஒன்று, பழைய தெல்லிப்பளைக் காரியாதிகாரிபிரிவு 15கிராம சேவையாளர் பகுதிகளைக் கொண்டதாயும், புதிய மருதனுமடக் காரியாதிகாரி பிரிவு 7 கிராமசேவையாளர் பகுதிகளைக் கொண்டதாயும் இருக்கும். புதிய காரியாதிகாரி பிரிவு ஏழாலை, உடுவில் கிராம சபைகளையும், சுன்னுகப் பட்டின சபையையும்உள்ளடக்கியதாய் மருதனுமடச் சந்திக்கு அருகாமையில் இயங்கும்.

## பிரதமரின் சுகவீனம்

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அப்பெண்டிசைற்றிஸ் எனப்படும் குடற்தாபித நோய்கண்டு சென்ற சனிக்கிழமை சத்திரசிகிச்சை செய்யப்பெற்றுச் சுகமடைந்து வருகின்றார். அதனால் இவ்வாரத்திலும், மறுவாரத்திலும் அவரின் சகல அலுவல்களும் நிறுத்திவைக்கப் பட்டிருக்கின்றன.

## 25ரூபா அபராதம்

திக்கற்றின்றிப் பஸ்களில் பிரயாணஞ் செய்வோருக்குத் தற்போது 5ரூபா அபராதமும், திக்கற் பெறுமதியின் இருமடங்கு தொகையும் அறவிடப்படுகிறது. ஆயினும் தினமும் பெருந் தொகையானோர் திக்கற்றின்றிப் பிரயாணஞ் செய்வதால்போக்குவரத்துச்சபைக்குப் பெருந்தொகைப் பணம் நஷ்டம் ஏற்படுவதாகக் கண்டறியப் பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து திக்கற்றின்றிப் பஸ்களில் பிரயாணஞ் செய்வோருக்கு 25ரூபா அபராதம் விதிப்பதுபற்றி ஆலோசிக்கப் படுகிறது.

## சீதனமும் முஸ்லிம்களும்

"சீதனம் வாங்கித் திருமணஞ் செய்யும் வழக்கத்தை முஸ்லிம்கள் கைவிடவேண்டும்; தமிழ்ச் சமூகத்திடமிருந்து பின்பற்றப்பட்ட இந்தச்சீதன முறை இஸ்லாத்துக்கே விரோதமானது; பணமில்லாத காரணத்தால் எத்தனையோ பெண்கள் நல்வாழ்வுபெற முடியாது கஷ்டப்படுகிறார்கள்; முஸ்லிம்கள் மத்தியில் சீதனப்பேய் தோன்றினமை துரதிர்ஷ்டவசமாகும்" என்று கல்வி மந்திரி டக்றர் பதியுதீன் மஹ்மூத் அன்று கொழும்பில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாஒன்றில் கூறியிருக்கின்றார்.

## இரண்டாவது கப்பல்

இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் இரண்டாவது கப்பலான 'ரெலோபன்' சென்ற 14ஆம்தேதி கொழும்புத் துறைமுகம்வந்து சேர்ந்துள்ளது. 7,751தொன்நிறையான இந்தக் கப்பல் 8,844தொன் நிறைகொண்ட உரவகைகளை ஏற்றிக்கொண்டு வரலாயிற்று. இதனைக் கிரேக்க கப்பல் கூட்டுத்தாபனம் ஒன்றிடமிருந்து இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் வாடகைமுறையில் வாங்கியுள்ளது.

## கல்வித்திட்டத்தின் பயன்

மாறிவரும் உலகப்போக்குக்கு ஏற்றவகையில் எமது நாட்டிலும் அடுத்தவருடமுதல் புதிய கல்வித்திட்டம் புகுத்தப்படவிருக்கிறது; விஞ்ஞானத்திற்குப், தொழில்நுட்பப்பயிற்சிக்கும் முதலிடம் அளிக்கும் இந்தக் கல்வித்திட்டத்தின் பயனை 1975ஆம் ஆண்டளவில்தான் காணலாமென்று உதவி மகா வித்தியாதிபதி நாவலப்பிட்டியிலே நடைபெற்ற பரிசளிப்பு விழா ஒன்றில் கூறியிருக்கின்றார்.

## தலைவர்களின் மகாநாடு

அகில இலங்கைக் கிராமச்சபைத் தலைவர்களின் வருடாந்த மகாநாடு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது. அதற்குப் பொதுநிர்வாக – உள்ளூராட்சி – உள்நாட்டு மந்திரி திரு. பீலிக்ஸ் பண்டாரநாயகாவும் சமூகமளித்து, சிலகாலத்தின் முன் தான்கூறியதை நிறைவேற்றுமுகமாக அரைமணிநேரம் குறிப்புஎதனையும் பாராமலே சிந்தித்துச் சிந்தித்துத் தமிழில் அழகாக உரைநிகழ்த்தி அனைவரதும் பாராட்டைப் பெற்றார். மகாநாடு ஆரம்பமுதல் அந்தம்வரை சிங்களம், தமிழாகிய இருமொழிகளிலும் நடைபெற்றது.

## ஆஸ்பத்திரிக் கட்டில்கள்

ஆஸ்பத்திரிகளில் போதிய கட்டில்கள் இல்லாதகாரணமாகப் பாயும் தலையணையும் வழங்கப்படுவதை நிறுத்திவிடச் சுகாதார அமைச்சு வடவடிக்கை எடுத்துவருகிறது. இதற்கென்று 85,000 ரூபாவரை பெறுமதியான கட்டில்கள் இப்போது அரசாங்க தளபாடத் தொழிற்சாலையில் செய்யப்பட்டிருக்கின்றன.

## மாணவிகளும் சீருடையும்

மாணவிகள் அணியும் ஒரே மாதிரியான சீருடைகளின் உயரம் இவ்வளவென்று இதுவரை பாடசாலைகளுக்கு அதிகாரபூர்வமாக எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பிறப்பிக்கப்படவிருக்கும் புதிய உத்தரவின்படி மாணவிகள் முழங்காலுக்குக்கீழ் கவுண் அணியவேண்டிவரும். இதனைச்செயற்படுத்தும் பொறுப்பு பாடசாலைத் தலைவர்களுக்கும், வகுப்பு ஆசிரியர்களுக்கும் உரியதாகும். புதிய உத்தரவுக்கு இணங்க மறுக்கும் மாணவிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## புதிய விமானம்

இலங்கை விமானச்சேவை ஸ்தாபனம் புதிய விமானம் ஒன்றை வாங்கிச் சேவையில் ஈடுபடுத்தவிருக்கிறது. இந்த விமானத்தில் 135பிரயாணிகள் ஏககாலத்தில் பிரயாணஞ்செய்யலாம். இதுவருகிற சித்திரை மாதம் 1-ந்தேதி ஆரம்பிக்கவிருக்கும் புதிய சர்வதேச விமானசேவையில ஈடுபடுத்தப்படவிருக்கிறது.

## மக்கள் சந்தைகள்

கொழும்பு குதிரைப்பந்தயத் திடலிலுள்ள மக்கள் சந்தையைப்போல் நாடுமுழுவதிலும் பல சந்தைகளை அமைக்க உள்ளூராட்சி அமைச்சு முன்வந்திருக்கிறது. இவைகளை அமைக்கும் பொறுப்பு கிராமச்சபை, நகரசபை முதலாம் உள்ளூராட்சி மன்றங்களிடம் விடப்படும். இதற்கென்று அவைகளுக்கு வழங்குவதற்கு அமைச்சு 1லட்சத்து 40 ஆயிரம்ரூபா ஒதுக்கியிருக்கிறது.

## 'மினிகவுண்' தடைசெய்யப்படும்

பாடசாலைமாணவிகள் 'மினிகவுண்' அணிவது முற்றாகத் தடைசெய்யப்படவிருக்கிறது. இதுசம்பந்தமான சுற்றுநிருபம்ஒன்று இன்னும்சில தினங்களில் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்படுமெனத் தெரியவருகிறது. சென்ற 11-ந்திகதியன்று கல்விமந்திரி மற்றும் இரு உயர் அதிகாரிகளுடன் கொழும்பிலுள்ள மகளிர் பாடசாலை ஒன்றில் திடீர்ப் பரிசோதனை நடத்தியபோது பெரும்பாலான வளர்ந்த மாணவிகள் முழங்காலுக்குமேல் அதிகம் உயரத்தில் "மினிகவுண்" அணிந்திருப்பதைக் கண்டு கொண்டதிலிருந்தே அது தடைசெய்யப் படவிருக்கிறது.

## டலர் மதிப்புக் குறைந்தது

டலர் மதிப்பை 7·9சதவீதமாகக் குறைக்க அமெரிக்கா இணங்கியிருக்கிறது. இதனைத் தொடர்ந்து தங்கத்தின்விலை 8,57சதவீதம் அதிகரித்துள்ளது. இதன்படி ஓர்அவுண்ஸ் தங்கத்தின்விலை 38 டலராய் இருந்துவரும்.

## ஆறுலட்சம் ரூபா நஷ்டம்

வித்தியாலங்கார, வித்தியோதய பல்கலைக் கழகங்களில் சிறைவைக்கப் பட்டிருந்த பயங்கரவாதிகள் அவற்றிலே ஆறுலட்சம் ரூபாவுக்குமேல் பெறுமதியான பொருள்களையும், உபகரணங்களையும், கட்டடங்களையும் சேதப்படுத்தியிருப்பதாகக் கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றார், அவைகளைப் பழுதுபார்க்கத் தேவைப்படும் பணத்தைக் கண்டுகொள்வதே இப்பொழுது அவருக்குப் பெரும் தலையிடியாயிருக்கிறதாம்.

## தோட்டப் பாடசாலைகள்

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் இப்போதைக்குப் பொறுப்பேற்காதெனத் தெரிகிறது. முந்த 38பாடசாலைகளையும், பின்னர் 504 பாடசாலைகளையும் அது கையேற்கமுடிவு செய்திருந்தது. ஆனால், கல்வி அமைச்சை எதிர்நோக்கியுள்ள நிதிநெருக்கடி காரணமாக உடனடியாக அவற்றைக் கையேற்பது பின்போடப் பட்டிருக்கிறது.

## உள்நாட்டு அரிசிக்கும்

சந்தைகளிலே விற்கப்படும் உள்நாட்டுஅரிசி — அதாவது ஊர்அரிசியினதும் விலையைக் கட்டுப்படுத்த இப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தக் கட்டுப்பாடு சம்பந்தமான திட்டம் நடைமுறைக்கு வரும்போது அரிசி விற்பனைசெய்யும் வியாபாரிகள் தங்களுக்குத் தேவைப்படும் அரிசியை உணவுக் கமிஷனரிடமிருந்து பெறவேண்டும். இதற்கான பெர்மிற்றுகள் அவர்களுக்கு வழங்கப்படும். உணவுக்கமிஷனரே காலந்தோறும் அதன்விலையை நிர்ணயிப்பார். அதாவது தற்போது கூப்பனுக்கு வழங்கப்படும் இரண்டாவதுகொத்து அரிசியின் விலையிலும் பார்க்கச் சிறிது கூடியவிலைக்கே இது விற்கப்படுமாம்.

## மோட்டார் வாகன லைசென்ஸ்

மோட்டார் வாகனங்களின் வருடாந்த லைசென்ஸ்களை எடுக்கவேண்டிய காலஎல்லை இம்மாதம் 31-ந்தேதிவரை நீடிக்கப் பட்டிருக்கிறது. இத்திகதிக்குமுன் லைசென்ஸ் எடாத ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு லைசென்ஸுக்கும் 10 சதவீதமானவரிமேலதிகமாக அறவிடப்படும். இந்த லைசென்ஸ்களை எடுக்கவேண்டிய காலஎல்லை இம்மாதம் 14-ந்தேதியென முன்னர் விதிக்கப்பட்டிருந்தது.

## அதிகமான விடுமுறைநாட்கள்

இலங்கையிலே அரசாங்க ஊழியர்கள் இவ்வருடம் அதிகமான விடுமுறைநாட்களைப் பெறவிருக்கிறார்கள், இதனால் அவர்கள் இவ்வருடம் 223 நாட்கள் மட்டுமே கடமையாற்ற வேண்டியுள்ளார்கள், விடுமுறை நாட்களிலே அரசாங்க விடுமுறைநாட்கள் 101, மேலதிக விடுமுறை நாட்கள் 42, 101நாட்களும் சனி, ஞாயிறு வாரஇறுதி விடுமுறை நாட்களாகும்.

## 55 வயதுக்குமுன்

அரசாங்கத்தின்கீழ் சேவைசெய்யும் அரசாங்க ஊழியர்கள் இனிமேல் 55வயதுக்குமுன் இளைப்பாற — விசேடமாய் அரசாங்கத்துடன் சேவைஒப்பந்தம் செய்தவர்கள் 55வயதுக்குமுன் எக்காரணம் கொண்டும் இளைப்பாற அனுமதிக்கப் படமாட்டார்கள், மேலும் மொழிக்கொள்கையின் பேரிலே சேவையிலிருந்து விலக வழங்கப்பட்டுவந்த சலுகையும் நிறுத்தப்பட்டுள்ளது.

## ஆங்கில உதவி ஆசிரியர்கள்

கல்விஅமைச்சு சமீபத்திலே நியமனஞ் செய்யவிருந்த ஆங்கில உதவிஆசிரியர்களின் தொகையை 3,500 பேரிலிருந்து 1,500போராகக் குறைக்க முடிவுசெய்துள்ளது. இதற்கு முக்கியகாரணம், அதனை எதிர்நோக்கியிருக்கும்நிதிநெருக்கடியேயாகும். ஜி. சி. ஈ. பரீட்சையிலே ஆங்கிலபாடத்தில் சிறப்பாகச் சித்தியடைந்தவர்களே ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமனஞ்செய்யப்படவிருக்கிறார்கள்.

## தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள்

தராதரப் பத்திரமில்லாத 3,500 ஆசிரியர்களை இந்தத் தைமாத இறுதியிலே கல்வி அமைச்சு நியமனஞ்செய்யவிருக்கிறது. இவர்களுக்கு மாதம் 240ரூபா சம்பளம் வழங்கப்படும். இவர்களில் 70 சதவீதமானோர் விஞ்ஞான பாடங்களையே கற்பிப்பார்கள், ஒருவருடகாலசேவையின்பின் சம்பளத்துடன் ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளில் இவர்களுக்குப் பயிற்சிபெறச் சந்தர்ப்பம் அளிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

* * *

● இந்திய ஜனாதிபதியால் வழங்கப்படும் உயர்ந்த பட்டமான "பாரத இரத்தினம்" என்ற கௌரவப்பட்டம் இம்முறை இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22-1-47இல் காலஞ்சென்ற

# ஸ்வாமி ஞானப்பிரகாசர்: 25 ஆண்டுகளின் பின்னர்

**நல்லூர் ஸ்வாமியாராகிய ஞானப்பிரகாசரின் கல்வி ஒளி, இவர் பல் துறைகளில் தாம் அடைந்து ஏனையோர்க்கு விளக்கிய பாண்டித்தியம். இவரின் பழைய மாணுக்கனுகிய கலாநிதி வண. ஹ. சி. தாவீதடிகள் இயம்புவது பின்வருமாறே:**

"உலேயா முயற்சி களைகணு
ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே
— உலகு அறியப்
பான் முளை தின்று, மறலி
உயிர் குடிந்த
கான் முளையே போலும் கரி".

நீதி நெறி விளக்கம் 51,

உரை: "இளையாத, சோராத, சோர்பாத, முயற்சியையே பற்றுக்கோடாகக் கொண்டு, விதியென்பதின் வலிமையைச் சிதைக்கின்ற வலிமையும் உண்டு, சிலர் மாட்டில். முழு உலகமும் அறிய, ஊழ்வினையின் முளையைத் தின்று, இயமனது உயிரையும் குடித்த மார்க்கண்டன் என்னுஞ் சிறுவனே இதற்குச் சான்றாகும்." இன்னுமொரு சான்று (அன்றேல் உதாரணம்) எம் ஞானப்பிரகாசரே; ஏனெனில், இவர் சாவை வென்றனர், கிறீஸ்துவுடன் (தன் புனித நடத்தையினுலும் சாங்கோபாங்கத்தினுலும்) நித்திய வாழ்விற் புகுந்தனர். மேலும் இவரின் பூதவுடல் சேமக்காலையை எய்தி இப்பொழுது 25 ஆண்டுகள் கழிந்து சென்றும், இவரின் புகழ்-உடம்பு மாய்ந்ததன்றே! "மலரவன் செய் வெற்றுடம்பு மாய்வன போல் மாயா புகழ் கொண்டு மற்றிவர் செய்யும் உடம்பு." (குமாரகுருபரர் அருளிச்செய்த நீதிநெறி விளக்கம், 7. 2—4.

உரை: பிரமன் உண்டாக்கும் ஊன் உடல்கள் அழிந்து போவனபோல, (மற்று) இப் புலவர்கள், ஞானப்பிரகாசர் ஆதியோர், உண்டாக்கும் நூல் ஆகிய உடம்புகள் (உதாரணமாக, இவரின் சொற்பிறப்பு—ஒப்பியல் தமிழ் அகராதி போன்றவை) புகழைப்பெற்று பல நூற்றுண்டுகளாக அழிந்து போகவே மாட்டாவாதலினு லெனக, சித்துப்பொருள் சடப்பொருள்களின் வலிதாதலின்.

எத்துறையில் இவர் பாண்டித்தியம் பெற்றனர் என நீர் வினவுவீராயின், முதலாவதாக: கிறீஸ்தவ வேத நூல்களிலே. இவற்றைக் கசடறக் கற்று, தமிழ்மொழியில் அநேக புனிதர்களின் வாழ்வு வரலாற்றையும், கத்தோலிக்க திருச்சபையின் சரித்திரத்தையும் அநுதினமும் இப்பொழுதும் எம் கோவில்களுள்ளே பாடப்படும் பல கீதங்களையும், செபிக்கப்பெறும் பற்பல மன்றாட்டுக்களையும் தமக்கு இயல்பாகவே எய்தும் இனிய செந்தமிழில் அமைத்தனர். இந்நூல்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்துப் பதிப்பித்தல் நன்றாகும்.

இரண்டாவதாக: உலக வரலாற்றிலும் இவர் ஈடுபட்டவர். இலங்கைச் சரித்திரத்தையும், விசேஷமாக யாழ் நகர் அன்றேல், நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் மன்னரினதும், ஈழத் தமிழ் நாட்டினதும் வரலாற்றையும் இனிதே விளக்கினர். இந்நூல்களைச் சான்றோர் இப்பொழுதும் கையாளுப. உதாரணமாக, அண்மையில, 21-12-71 இல், The Ceylon Catholic Messenger, அஃதாவது, "இலங்கைக் கத்தோலிக்க தூதன்" என்னும் செய்தித்தாளின் 8-ம் பக்கத்தில, ஞூசைப்பிள்ளை தொம்மானுப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு எழுதிப்போந்தனரன்றோ! "From S. Gnanapragasam O.M.I. we learn that the chapel of St Lawrence within the Colombo harbour area was the first catholic place of worship ever erected in this Island... "மேலும் நல்லூர் மன்னர்களின் கோப்பாய் மாளிகையைச் சிற்சில அடையாளங்களின் மூலம் கண்டு பிடித்தவரும் இவரே. "பரித்தித்துறைக்கு யாழ்நகர் நின்று செல்லும் பெருவழியின்கண் 5¼ கட்டையிலிருக்கும் உரும்பிராய்—கோப்பாய்—கைதடிச் சந்திக்கு வடகிழக்கில் இப்பொழுது பாழடைந்து கிடக்கும் கட்டடமே இம்மாளிகை" எனப் போதிய சான்றுகளுடன் 1932-ம் ஆண்டிலேதானே காட்டினர். "யாழ்" என்பது "நல்" என்றும், "பட்டினம்" என்பது "ஊரெ"ன்றும், "யாழ் பட்டினம்" என்பது நல்லூரரையே குறித்ததென்றும், இசைக்கருவியாகிய "யாழோ", குருடர், மூடர் ஆகிய "பாணரோ", — யாரெவரும் இஃதில் பங்கு பற்றுதல் செய்யவில்லையென்றும் அதேகாலத்தில் துலக்கமாகக் காட்டினர். எனினும், யாவரும் இதை ஏற்றனரல்லர்.

"நீர்த்தன்று ஒருவர்
நெறியன்றிக் கொண்டக்கால்,
பேர்த்துத் தெருட்டல்
பெரியார்க்கும் ஆகாதே
கூர்த்த நுண் கேள்வி அறிவுடை
யார்க்கு ஆயினும்
ஓர்த்தது இசைக்கும் பறை"

என்னும் பழமொழி நானூற்றின் 37-ம் பாவுக்கிணங்க, யாழ் நகர் வாசிகள் முறை பிறழ்ந்து கருதிய இடத்து, இசைக் கருவிகளுடனும், குருட்டுப் பாணர்களுடனும் தம் "எழில் நகரெனுங் கருத்துப்பெறும் யாழ் நகரை" இணைத்த, இடத்து மீண்டும் அம்மக்கள்களைத் தெளிவித்தல்முடியாதென நாளடைவிற் கண்டு, 1947-ம் ஆண்டு தைத் திங்களின் 22-ம் நாள் தாம் பிறந்த மானிப்பாய் சிற்றிலத்துக் கண்மையில் உயிர் நீத்தனர்.

மூன்றுவதாக: இந்துசமய வேத நூல்களிலும், இந்து தத்துவ சாஸ்திரம், இருக்குவேதம், பிராஹ்மணம், ஆரண்யக்கம், வேதாபந்தம், புது சைவம் போன்ற துறைகளிலும் ஈடுபட்டு, வேதங்களை ஓதும் பிராமணர்களே தம்மிடம் சமஸ்கிருத வேதங்களைச் செவ்வனே அறிந்துணரும் பொருட்டு வரவேண்டிய தன்மைக்குத் தம்வடமொழிப் புலமையை மேன்படுத்தினர். 1936-ம் ஆண்டு ஐப்பசி கடைசி ஞாயிறு தொடங்கி, 20 ஞாயிறுகளாக, 4-30 பிற்பகல் தொடங்கி 5மணி ஈறாக, எனக்கு இவ்வடமொழியைக் கற்பித்தனர். இவ்வளவு பாண்டித்தியம் பெற்றிருந்தும் யாதொரு காரியத்தை முழுதாக உணராவிடின், "தம்பீ, எனக்கு இஃது சரியாக விளங்கவில்லை; இப்பொழுது இதைக் குறித்து ஆராய நேரமுமில்லை. விளங்கக் கண்டதும், உடனே உமக்கு அறிவிப்பேன்" எனக் கூறி, ஒரு வாரத்திற்குப்பின் ஒரு தபால் அட்டையின்மூலம் பூரணமான விளக்கமொன்றை எனக்கு அனுப்புவார் இவர்.

நாலாவதாக: தமிழ் மொழியின் கண் இவர் தலைசிறந்த உரைநடை எழுத்தாளராக பாரதநாட்டிலும் ஈழத்தமிழ் நாட்டிலும் துலங்கினர். இவரின் "பண்டைத் தமிழரும் அவர்களின் பழைய நாகரிகமும்" போன்ற அநேக அநேக கட்டுரைகள் "செந்தமிழ்" போன்ற கற்றுணர்ந்தோரின் சஞ்சிகைகளின்கண் முக்கிய இடமொன்றை வகித்தன. இவரின் சொற்பொழிவுகளும் இவ்வண்ணமே செந்தமிழையே, "வானின்று இழிந்து சொரிகின்றதாரை மழைபோல விழுமிதம், சொரிந்தன. 30 ஆண்டுகள் முன்னர் இவர் எமக்கியம்பியதாவது: "கற்றதனால் ஆய பயன்என்கொல், தொல் திராவிடமாகிய சீரியதாமீழத்தையும் அவளின் மூத்த புதல்விகளான தமிழ், சிங்களம், கன்னடம், தெலுங்கு மொழிகளையும் பூரணமாய் உணராவிடின்?" [இவருக்கு மலையாளம் தமிழின் மறுமுகம்; வேறொரு மொழியன்று]. இந்நான்கு மொழிகளில் பொறிக்கப்பெற்ற புனித உண்மைகளை உணர்ந்து வாழ்வதே "வாலறிவன் நற்றாள் தொழுவதற்கும்" அதனால், "அறம், பொருள், இன்பமும் வீடும்" அடைவதற்கும் தலைசிறந்தவழி என இவர் அடிக்கடி எமக்குப் போதித்தனர். தமிழ் மொழிக்கும் அவளின் தங்கையாகிய "சிஎளுவம்" (அன்றேல் சிங்களம்) என்பதற்கும் உளதாய நெருங்கிய தொடர்பை நன்றாகத் தாமே உணர்ந்து "சிங்களவர்" என்று தம்மை அழைக்கும் "தாமீழ மக்களுக்கு" இதைக் காட்டுவான். Some Dravidian Elements in the Sinhalese Language" என்னும் கட்டுரையைத் திறமாக உருவாக்கி, "Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society Colombo" எனுஞ் சஞ்சிகையில் "இஃதை வெளியிடுக", என விண்ணப்பித்து அனுப்பினர். ஆனால், ஆங்கிலர் கட... வெளியி... நிறத்தையே வணங்குவதைப் போல, அந்நாளைய சிங்களவரும் "வாய்மை வேண்டா; ஆரியமே எமக்கு வேண்டும். அவளின் இரு முலைகளாகிய பாளி, பிராகிருதம் நடுவண் மட்டுமே யாம் துயில்வோம். அ(ப்)பி(ட்)ட எதமள எ(ப்)பா, அஃதாவது, "எங்களுக்கும் தாமீழம் வேண்டா" என ஆர்ப்பரித்து, இவரின் சிறந்தகட்டுரையைத் திருப்பி வாளா அனுப்பினர். அந்நாட்களில் வியென்னு என்னும் அவுஸ்திரியாவின் தலைநகரத்தில் "Anthropos" அஃதாவது "மனிதன்" என்னும் பாண்டித்திய சஞ்சிகை உணர்ந்தோர் யாவராலும் முதலாம் அணியில் வைக்கப் பெற்றது. இஃதில் ஒரு கட்டுரை இடம் பெறுவது அரிதிலும் அரிதே. ஆனல், ஞானப்பிரகாசர் தம் இதே கட்டுரையை ஆங்கிலம், ஜேர்மன் எனும் இரு மொழிகளிலும் செவ்வனே வரைந்து அனுப்ப அச்சஞ்சிகை ஆசிரியர் அதை அடுத்த மாதத்திற்றுனே ஆங்கிலத்திலும், விரைவில் ஜேர்மன் மொழியிலும் வெளியிட்டதுமன்றி இவர் புகைப்படம் பெற்று, அதை ஜேர்மன் முத்திரையொன்றில் பொறித்தல் வேண்டும், என விண்ணப்பித்தனர். இதை மட்டும் என்குரு எனக்கியம்பினர். பின்பு ஏனையோர் இம்முத்திரையைக் கண்டதாக எனக்குக் கூறினர். ஞானப்பிரகாசர் இம்முத்திரையை எனக்குக் காட்டினாரல்லர். ஏனோ எனக்குத் தெரியாது.

ஐந்தாவது: "ஐந்து" என்பது 'சின்ன, நுண்மையான;' பின்பு "5" என்னும் இலக்கத்தைக் குறித்தது. ஏனெனில், ஆதிமாந்தர் எண்ணும் பொழுது விரல்களை உபயோகித்தனர். இவ்விரல்களில் ஐந்தாவது சின்னி விரலன்றோ? கடைசித்தங்கை போல் இஃது "மிகச்சிறியவள், தமக்கு ஐ தங்கை, அன்றேல் தங்கைச்சி" அன்றோ? ஆனல், இவ்விஷயத்தில் ஐந்தாவதே முக்கியமான துறை. இத்துறையின் .பெயர் மொழியியல். ஆங்கிலத்தில் இஃதை "Philology, etymology, linguistics' 'எனப் பல்வேறு விதங்களாகச் சான்றோர் அழைப்பர். இத்துறையில் மிகப்பெரிய பாண்டித்தியம் பெற்றதனல், மானிப்பாய்—நல்லூர்—திருநெல்வேலி—அச்சுவேலி ஆகிய ஊர்களின் தனிச்செல்வமும் பூணுமாக விளங்கிய இச்சுவாமியார் முழு உலகின்கண் பெயர்பெற்றது, முக்கியமாய்த் தன் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதியால் என இயம்பின் அஃது மிகைஆகாது. பல்வேறு மொழிகளை விசேடமாய்த் தாமீழ ஆரிய குடும்பங்களின் பாஷைகளைக் கசடற ஏற்கனவே கற்றதனல் இவருக்குத் தாமீழத்தினதும் "Proto Indo-European,, என அழைக்கப்பெறுந் தொல் ஆரியத்தினதும் ஆகிய தொல் உருவங்கள் யாவை எனப் பூரணமாக விளங்கின. ஆனதினல், Caldwell (திராவிட ஒப்பிலக்கணம்); Kittel (Kan-Engl. Dict.) T. Burrow and M. Emmeneau (Comparative Dravidian Dictionary) போன்றவர்களைக் காட்டிலும் இன்னும் கூடிய தாழ்ப்பத்திற்கு சுவாமி ஞானப்பிரகாசர் இறங்கி அநேக, அநேக பதங்களை இவ்விரு குடும்பத்திற்கும், பொதுவாயிருந்தன எனக் காட்ட வல்லுநரானர். ஆனல், இஃது இன்று ஐரோப்பிய மொழியியலை இதுநாறுந் தங்கள் விதமாகக் கற்றவர்க்குப் பிடிக்கவில்லை அவர்களுக்கும் ஸ்வாமி ஞானப்பிரகாசருக்கும் இடையே நடந்த பத்தாண்டு (1937—1946)ப் போரைக்குறித்து யான் என் சொற்பிறப்பு—ஒப்பியல் தமிழ் அகராதியின் முதலாம் பாகத்தின் முதல் 23 பக்கங்களில் இயம்பினேன். இப்போரில் யார் வென்றனர் என ஆராயின், இன்னுங்கூட நேரம் வீணுகும். "போரினின்று தப்புவதே சால்புடைத்து" என என் சர்வகலாசாலையாசிரியர் எமக்கு இங்கிலாந்து—ஜேர்மனியா ஆகிய பிரதேசங்களில் பன்முறை வற்புறுத்தினராதலின் எம் குருவின் முடிவுகளைப் படிப்படியாகவும், மிதமிஞ்சிய உதாரணங்களுடனும், வசீகரிக்குந்தாழ்ந்த மனப்பான்மையுடனும் "வெற்றிபெற அல்ல, உண்மையை அறியவே, யாம் தெண்டிக்கின்றோம்" எனக்கூறி, அவரின் எதிரிகளைக்கூட அரவணைத்து, இரு கன்னங்களிலும் முத்தமிட்டு (யூதாஸைப் போலன்றி) இவர்களையுஞ் சேர்த்துக் கொண்டு "தாமீழ-தொல் ஆரிய மொழிகளின்" வேற்றுமைகளையும் ஒற்றுமைகளையும் ஆராய்கின்றனம். நீயிரும் வாரீர்! இத்தால் எம் குருவுக்கு உன்னத மகிமை ஏற்படுமன்றோ!

---

● லண்டன் நகர் வாசிகளான 60லட்சம் மக்களுக்கும் நாள் ஒன்றுக்கு 40கோடிகலன் தண்ணீர் வழங்குவதற்கென்று மட்டும் இந்தப் புத்தாண்டிலே செலவிடப்படவிருக்கும்பணம் 2கோடியே 80லட்சம் பவுண்.

● 14தினங்களாக நடைபெற்றுமுடிந்த இந்திய—பாக்கிஸ்தான் யுத்தத்திலே இந்திய போர்வீரர்களில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்களின் தொகை 11,364 பேராகும். இவர்களில் கொல்லப்பட்டவர்களின்தொகை 2,473 பேர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடலாம் என்று, அவர் பதவியில் இன்று நல்லூரில் இருக்கும் பிலிப்புச் சுவாமியார் எதிர்பார்க்கிறார்.

### சமஸ்கிருத பேரறிஞர்

சுவாமி ஞானப்பிரகாசர் இவற்றோடு நிற்கவில்லை; பாஷைகள் படிப்பதிலே கரிசனை காண்பித்தார். சரித்திர ஆராய்வுக்காகப் போர்த்துக்கேயம் படித்திருந்தார். அடுத்ததாக வடமொழியும் பாளியும் தொடங்கினார். பெரிய குருமடத்திலே பயிலும்போது ஒருநாள் வீரமாமுனிவரின் தேம்பாவணி நூலின் பாயிர ஒற்றையைப் பார்க்க நேர்ந்தது. இது பெஸ்கி புனிதவளன் மேற்பாடிய காப்பியமென்க. இவண் அறியாதமொழியிலே சில சொற்களைக்கண்டு அவை சமஸ்கிருதமென்று விசாரித்தறிந்தார். சாதாரண வேதத்தின் விருத்திக்கு வடமொழி நூல்களிலே அடங்கிக்கிடக்கும் திரவியங்களையும் அரித்தெடுத்து, கிரேக்கர் றோமரின் தத்துவம் இலக்கியம் போலே பாவிக்கப்படவேண்டுமென்று உடனே முடிவு செய்தார். இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே, சேர் இராமக்கிருஷ்ண கோயால் பண்டக்கார் சமஸ்கிருதத்தில் நயமான தொடர் நூல்களை வெளியிடு முன்னே, அன்றைய புத்தகங்களோடு, அதுவும் துணையோ ஆசிரியரோ இல்லாது அந்த மொழியைக் கற்பது மலைமேல் ஏறும் வேலை போலேதான், வடமொழியெனும் இடபத்தோடு ஞானப்பிரகாசர் சமர் செய்து வெற்றி பெற்றார். சமஸ்கிருத சமயநூல்களிலே பயிற்சிபெற்ற பிராமணரே இருக்கு வேதத்திலே செறிந்திருக்கும் அரும் செய்யுள்களின் விளக்கத்துக்கு அவருதவியை நாடுவாராயின் அவரது தேர்ச்சியை வியக்காதிருக்க முடியாது. வடமொழி இலக்கியத்தில் அவர் அதிக அக்கறை காட்டவில்லை. உபநிடதங்கள் முதல் வேதாந்தம் மட்டாகவுள்ள தத்துவ நூல்களிலேயே அவரது விசேடகவனம் சென்றது. பகவத்கீதையின் அழகான பதிப்பொன்று அவரிடமிருந்தது. ஒருகால் அதிலிருந்து பல சுலோகங்களை மனப்பாடமாகவே சொல்லக் கூடியவராயினர். இவ்வித வடமொழிப் பயிற்சியின் பயன் அவரது தத்துவ வித்தக முத்தெனும் "தத்துவசைவம் அல்லது சைவசித்தாந்தம்" எனும் நூலாக 1917-ல் சபாரத்தினம் முதலியாருக்கு விடுத்த விடையோடு வெளிவந்தது.

வளரும்.

## நோயாளரின் நவீன கோவில்

இங்கிலாந்தில் டாளிங்டன் நகருக்குச் சமீபமான குறெவ்ற் எனும் இடத்தில் புனித குத்பேட்டின் பெயரால் 90,000 பவுண் செலவில் ஒரு நவீனகோவில் கட்டப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஒரு விசேடம் யாதெனில், எந்த ஒரு ஆசனமும் அதில் இல்லாதிருப்பதே. இதன் தளம் முழுவதும் சில்லுக் கதிரைகளுக்கென்று வெறுமையாக விடப்பட்டுள்ளது. ஏனெனில், இதன் அண்மையில் தீராத நோயாளரைப் பராமரிக்கும் புனித தேவ அருளப்பர் ஆஸ்பத்திரியிலிருந்து நோயாளரை வைத்துத் தள்ளிச் செல்லும் சில்லுக்கதிரைகளுக்கே இதில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் மட்டுமே அங்கு நடைபெறும் திருவழிபாடுகளில் கலந்து கொள்ளுகிறார்கள். இந்தக் கோவிலுக்கென்று 27அடி நீளமான சித்திரத்தொங்கல் வஸ்திரத்தைச் செய்வதற்கு லண்டன் நகர கன்னியாஸ்திரிகள் மூவருக்கு ஒரு வருடம் பிடித்தது.

### துன்புறப்படுத்தப் படுவோருக்கு உதவுதல் பொதுநிலை

## மக்களது கடமை

சென்றமாதம் 2-ம் திகதி பரிசுத்த தந்தை உலகபொதுநிலைமக்கள் சபையின் பிரதிநிதிகள் 50பேர் அடங்கிய குழுவினருக்கு அளித்த பேட்டியில் உலகிலே சமூக, பொருளாதார, சமயரீதியில் துன்புறுத்தப் படுவோருக்கு உதவிசெய்வது கத்தோலிக்க பொதுநிலைமக்களின் கடமை என்பதை வற்புறுத்தினார். பொதுநிலை மக்கள் சங்கஅங்கத்தினர் அடங்கிய ஒரு விசேஷ குழுவினர் துன்புறுத்தப்படுவோருக்கு செய்யக்கூடிய உதவிகள் பற்றிச் சென்ற ஐந்து வருடகாலமாக ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இவர்களின் வேலையைப் பாப்பரசர் பெரிதும்மெய்ச்சி, அதை மேலும் 5வருடகாலத்துக்குத் தொடர்ந்து செய்துவரக் கேட்டிருக்கின்றார்.

### அங்கிளிக்கன் சபையினரும் கத்தோலிக்க செமினறியில்

## கற்கின்றனர்

தென் ஆபிரிக்காவில் உம்றாற்ரு என்னும் இடத்திலுள்ள கத்தோலிக்க குருமாணவர் கல்லூரியில் இவ்வருடம் 6 அங்கிளிக்கன்சபைக் குருமாணவர் கத்தோலிக்க மாணவருடன் ஒன்றாக வசித்து ஒன்றாக கல்விகற்று வருகின்றனர். அவர்களுக்கெனப் பிறிதாக அவர்கள் முறைப்படியுள்ள நற்கருணைச் சடங்கு நடக்கின்றது. மறுசெபங்கள் சடங்குகள் யாவற்றிலும் அவர்கள் ஒன்றாகபங்கு பெறுகின்றனர்.

● ஐக்கியநாடுகள் சபையின் பொதுக் காரியதரிசியாய் இருந்துவந்த ஊதாண்ட் அவர்கள் தம்முடைய பதவியிலிருந்து விலகியதால் அவரிடமாக ஆஸ்திரியாவைச் சேர்ந்த டக்டர் கோட்டே வால்டீம் அவர்கள் தெரிவுசெய்யப் பட்டிருக்கின்றார்.

### உலக நீதிக்கு கத்தோலிக்கர்

## உழைக்கவேண்டும்

சென்றவருடம் வத்திக்கானில் நடந்த ஆயர் சினொட்டில் விசேஷஅழைப்பின்மேல் உரையாற்றிய பொருளாதாரத்துறை விற்பன்னர் ஆங்கிலமாது பார்பரு வாட்அம்மையார், வத்திக்கான் உத்தியோகமுறைப் பத்திரிகையாகிய "ஒப்சவாற்றோர் றோமானோ"வில் அண்மையில் வரைந்திருக்கும் கட்டுரையில் உலகிலுள்ள சுமார் 500,000,000 கத்தோலிக்கருக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். அதில் அவர்கள் உலகத்தில் நீதிநிலவுவதில் விழிப்பாய் இருக்கவேண்டுமென்பதே. பகிரங்க அபிப்பிராயத்துக்கு இருக்கும் மானத்தை எடுத்துக்காட்டி இத்தனை கோடி கத்தோலிக்கரினதும் ஒருமித்த குரல் ஒருபோதும் பயனற்றதாக மாட்டாதுஎன விளக்கியிருக்கின்றார். ஆகவே கத்தோலிக்கர் யாவரும் உலகத்தில் அநீதிஎங்கு நடப்பினும் அதை வன்மையாக கண்டிக்கவும், ஒன்றித்து முறையான வழிவகைகள் எடுத்துக் கொள்ளவும் கேட்டிருக்கின்றார்.

### கொழும்பு புனித அந்தோனியார் இளைஞர் முன்னணியின் நிர்வாகிகள்

புனித அந்தோனியார் இளைஞர் முன்னணியின் 10ஆவது வருட புதிய உத்தியோகத்தர் தெரிவுக் கூட்டம் 9-1-72இல் காலை 10-30 மணியளவில் பரிபாலகர் வண. பிதா றெஜினேல்ட் ஏபிரகாம் மேற்பார்வையின்கீழ் நடைபெற்றது. பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எக்ஸ். இஜினர் கோஸ்டா, உபதலைவர்: ஏ. வில்பிரட் பெஞ்சிகர், செயலாளர்: எம். அருமைநாதர், உபசெயலாளர்: கே. லூக்காஸ் பெர்னாந்து, பொருளாளர்: என். றெக்ஸ் பெர்னாந்து, உபபொருளாளர்: வீ. ஜே. ஜோமார்சல், வாசிகசாலை பொறுப்பாளர்: எஸ். ராஜரட்ணம், வாசிகசாலை உப பொறுப்பாளர்: எஸ். ஸ்டீபன், விளையாட்டுப் பொறுப்பாளர், ஏ. எஸ். ஏபிரகாம்.

## 25,000 வீடுகள்

தேவைக்குமேல் அதிகமான வீடுகளைச் சொந்தமாகக் கொண்டிருப்பதைக் கட்டுப்படுத்தும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்போது, சுமார் 25,000 வீடுகளை அரசாங்கம் சுவீகரிக்கக்கூடியதாய் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதமரின் சமூக பொருளாதாரத் திட்டத்தின்படி ஒருவர் தனது சொந்தப் பாவனைக்கு ஒருவீடும், மேலதிகமாக ஒருவீடும், தனது ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு வீடும் வைத்திருக்க அனுமதிக்கப்படுவர்.

# புதுவருட சிந்தனைகள்

ஆம்! இதோ புதுவருடம் பிறந்துவிட்டது. பழையன கழிந்து புதியன புகுந்துவிட்டது. நம் அன்பின் தேவன் எம் எல்லோர்மீதும் கொண்ட இரக்கப்பெருக்கத்தால் நம் யாபேர்க்கும் இதனை ஓர்பரிசாக வழங்கியிருக்கிறார். இல்லை, இல்லை, ஓர் கடைசி எச்சரிக்கையாக வழங்கியிருக்கிறார் என்பதே சரி. ஏன், கடைசி எச்சரிக்கை? ஏனெனில், நம் கடந்துபோன வாழ்நாளில் பலவகையாலும் நாம் கட்டிக்கொண்ட பலமாதிரியான பாவ துரோகங்களுக்கும்—தெரிந்தோ தெரியாமலோ—நம் அதர்மத்திலோ, பலவீனத்திலோ செய்து தொலைத்த சகல பாவ அக்கிரமங்களுக்கும் பரிகாரமாக, உண்மையிலும் நேர்மையிலும் அவர் சமூகத்தில் எம்மைத் தாழ்த்தி உள்ளம் உருகி, இனிமேல் இந்த இளவெடுத்த பாவ துரோகங்களையெல்லாம் தேவ உதவியைக் கொண்டு "இன்று விட்டேன் கொண்டலடி" என்று அந்த நரி செய்த தீர்மானத்தைப்போல், நாமும் கெட்டியான பிரதிக்கினை செய்து, இந்தப் புதிய வருஷத்தோடு தேவனுக்கேற்ற முறையிலும் நம் இரட்சணியத்துக்கு அவசியமான முறையிலும் புதிய சீவியம் சீவிக்கும் பொருட்டே, இந்த நோக்கத்துக்காகவே நம் அன்பின் தேவன் தமது இரக்கப் பெருக்கத்தில் திருவுளம் கனிந்து இந்தப் புத்தாண்டை நம் ஒவ்வொருவர்க்கும் தமது பிறந்த பெருநாளின் வெகுமதியாகவும், தமது பொறுமையின் கடைசி எச்சரிக்கைச் சின்னமாகவும தந்தருளினார். நம் எல்லோர்க்கும் இது அதிஷ்டவசமாய்க் கிடைத்த ஓர் பெரும் தேவகொடை. ஏன்? ஏனெனில், நம்மில் எத்தனையோ பேர் இந்தப் புத்தாண்டைக் கண்டுகழிக்க ஆவலோடு காத்திருந்தும், இந்தக் கடைசி எச்சரிக்கையைப் பயன்படுத்தி நற்பயனை அறுவடை செய்யவும், இந்த அரியவரம்—சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டவுமில்லை, கிடைக்கவுமில்லை, இதையிட்டுத்தானுக்கும், அதாவது எமக்குக் கிடைத்த இந்த வரமாகிய உயிர்ப்பிச்சையின்பேரிலும், கடைசிச் சலுகையின் பேரிலுமாக்கும், "விழுந்து போனவர்கள் மட்டில் சர்வேசுரனுடைய கண்டிப்பையும், உன்மட்டில் அவருடைய தயவையும் பார்" என்று பவுலப்போஸ்தலர் நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். ஆம், இதில் சந்தேகமென்ன? இந்த நாட்களின் மரணங்களென்ன? திடீர் மரணங்கள்! பயங்கர மரணங்கள்!! வீட்டுக்கு வீடு எம்மவரிலும், மற்றவரிலும் சென்ற ஆண்டில் எத்தனை செத்தவீடுகள்!!! இந்த விதமான மரணங்களும், கெடுதிகளும் இன்று இப்புத்தாண்டில் இருக்கும் வரம்பெற்ற எங்கட்கு இல்லாமல் போனது எவ்வளவு அதிஷ்டம்!

சிறக, நாம் இந்த உலகத்தில் வழிப்போக்கராய்— யாத்திரைக்காரராயிருக்கிறோம். இந்தப் பூமி நாம் செய்யும் யாத்திரையில் சற்றுக் களையாறி— இளைப்பாறித் தங்கித் தரித்துப்போக ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஓர் சத்திரம்—தங்குமடம். எனவே இவ்வுலகம் எமது நிரந்தர வீடல்ல—நாடல்ல. எமது நிரந்தர வீடு—நாடு விண்ணுலகிலிருக்கும் மோட்ச மாநகரமாம். இதை நோக்கித்தான் நாம்யாத்திரை செய்கிறோம்.

அது பலருக்கும் பல மைல் தூரமாயிருக்கலாம். சிலருக்கு இன்னும் இது ஒரு மைல் தூரமாயிருக்கலாம். இந்தச் சொற்ப இடைவெளித் தூரத்திற்குள்தான் நாம் எமது இரட்சணிய அலுவலை முடிக்க வேண்டும். ஆகவே, நாம் இனிச் செய்ய வேண்டியது என்ன? நாம் பாவத்துக்கு மரித்துப் புண்ணியங்களுக்குச் சீவிக்கவேண்டும்; அதாவது சர்வேசுரனுக்கெனச் சீவிக்க வேண்டும். எப்படி? விஷப்பாம்புகளில் பலவிதமான பாம்புகள் இருக்கின்றன அல்லவா? அதேபோலப் பாவங்களிலும் பலவிதமான விஷப்பாம்புகள் உண்டு. பாம்பைக்கண்டு பயந்தோடுவது போல் நாம் இந்தப் பாவமென்னும் பாம்புகளைக் கண்டு பயந்தோடவேண்டும். ஆனால்; பாவத்திலும், பலவீனத்திலும் இயற்கையில் உறைந்துபோயிருக்கும் நம்மால் இது சாத்தியமா? அல்லது முடியுமா? நம் சுயபலத்தால் முடியவே முடியாது. ஆனால் தேவ உதவியைக் கொண்டும், தேவதிரவிய அனுமானங்களைக் கொண்டும், மனமுண்டானால் நம்மால் முடியும். பவுல்அப்போஸ்தலரும் இவற்றை ஆதாரமாகக் கொண்டுதான், "என்னால் முடியாத காரியம் ஒன்றுமில்லை" என்றார். காசு பணமின்றி நாம் பொருள்களை வாங்க முடியாததுபோல, புண்ணியங்களாகிய ஞானக் காசு பணமின்றி நாம் மோட்சத்தை வாங்க முடியாது. ஆகவே, நாம் மோட்சத்தை அடையவும் வேண்டுமானால் இதுவரையும் நாம் செய்த சகல பாவங்களையும் வெறுத்து அவற்றிற்கு நேரிடையான புண்ணியங்களைச் செய்து தேவனைத் திருப்திப்படுத்த வேண்டும். எனவே, நமது யாத்திரையில் மோட்சத்துக்கோ, நரகத்துக்கோ உள்ள இடைத்தூரம் இன்னும் வெகு சொற்பமாயிருப்பதனால், சிலவேளை பலருடன் இன்னும் எனக்கும் உனக்கும் இதுவே சில சமயம் கடைசி வருஷமாயிருந்தாலும் இருக்கலாமாதையால், பவுலப்போஸ்தலர் கூறியவாறு, இந்தப் புத்தாண்டில் "நம் இரட்சணிய வேலையை அச்சநடுக்கத்தோடு நிறைவேற்றுவோமாக" (பிலி. 2 : 12). எனவே, இவ்வாண்டில் இதுவே எமது சிந்தனையும், பிரதிக்கினையுமாயிருக்கட்டும்.

—சி. எஸ். நாயகம்,
பத்தாவத்தை, இளவாலை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு தை மாதம் 22-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org